# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 07 | பாடம் : வரலாறு I, II | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :......................................................................................................

### பகுதி I

01) இந்நாட்டின் வரலாற்றில் குறிக்கோளுடனும் பொறுமையுடனும் செயற்பட்டு தன்நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டமையை பின்வரும் எந்த மன்னனிடமிருந்து முன்மாதிரியாக பெற முடியும்?
(01) வசப மன்னன் (02) தாதுசேன மன்னன்
(03) மானவர்ம மன்னன் (04) முதலாம் சேன மன்னன்

02) காடுகளை தீயிட்டுக் கொளுத்திய பின்னர் துப்பரவு செய்து கொள்ளப்படும் சேனை நிலம் இலக்கியங்களில் “சேன்” எனக் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூறும் நூல் யாது?
(01) சீஹலவத்து (02) மகாவம்சம் (03) உம்மக்க ஜாதக (04) சத்தர்மலங்கார

03) புராதன காலத்தில் வளர்க்கப்பட்ட கால்நடைகளில் ஒன்றான மாடுவளர்ப்பின் நோக்கங்களில் ஒன்றாக அமையாதது எது?
(01) பாலைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்பட்டது.
(02) விவசாய நடவடிக்கைகளிற்குப் பயன்பட்டது.
(03) போக்குவரத்திற்குப் பயன்பட்டது.
(04) பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது.

04) பானையைத் தலையாகக் கொண்டு செய்யப்பட்ட வெருளியை அழைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பதம்?
(01) நவதெளிசேனை (02) கினியா திகாவ (03) ஹெலிகடா (04) பிட்டபிம்

05) அருகில் காட்டப்பட்டுள்ள உருவின் மூலம் வெளிப்படுத்தப்படும் கைத்தொழிலாக அமையக் கூடியது.
(01) இரும்புக் கைத்தொழில் (02) மட்பாண்டக் கைத்தொழில்
(03) தங்கக் கைத்தொழில் (04) இரத்தினக்கல் கைத்தொழில்



06) இரண்டாம் சேனன் (கி.பி. 853 – 887) மக்களுக்காற்றிய பணிகளில் ஒன்றாக அமைய முடியாதது?
(01) மகாவலி கங்கைக் கரையில் மணிமேகலா என்னும் அணைக்கட்டைப் புனரமைத்தமை.
(02) மின்னேரியாக் குளத்தில் மதகு ஒன்றைக் கட்டியமை.
(03) மிகிந்தலையில் வைத்திய மனையை தாபித்தமை.
(04) நாட்டில் மரபு ரீதியான நிர்வாக முறையை ஏற்படுத்தியமை.

07) இரண்டாம் சேன மன்னனின் திறமையான தளபதியாக விளங்கியவன்.
(01) குட்டக (02) மாப்பா (03) யுவராஜன் (04) தாடோபதீசன்

08) இலங்கை ஆரம்பத்திலிருந்து வெளிநாடுகளுடன் மிக வெற்றிகரமான வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தமைக்குப் பிரதான காரணம்?
(01) எமது நாட்டில் பெறுமதியான வளங்கள் காணப்பட்டமை.
(02) எங்களது நாடு இரத்தினக் கற்களுக்குப் பிரசித்தி பெற்றிருந்தமை.
(03) நாட்டில் அதிக எண்ணிக்கையான துறைமுகங்கள் காணப்பட்டமை.
(04) இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.

09) “லோகுரு” எனப்படுகின்ற கைவினைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழிலாக அமைவது.
(01) இரும்புக் கைத்தொழில்
(02) தங்கக் கைத்தொழில்
(03) செம்புக் கைத்தொழில்
(04) வெள்ளிக் கைத்தொழில்

10) சாதாரண மனிதர்கள் மட்டுமல்லாது மன்னன் கூட தமது தாயாரைக் கவனித்துக் கொண்ட முறை பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய அரசன்?
(01) பண்டுகாபயன் (02) தேவநம்பியதீசன் (03) மானவர்மன் (04) எட்டாம் அக்கபோதி

11) சேனைப் பயிர்ச் செய்கையாக மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை பிற்காலத்தில் பாரிய அளவிலான பயிர்ச்செய்கையாக மாற்றமுறக் காரணம்?
(01) அறிவு வளர்ச்சி
(02) சனத்தொகைப் பெருக்கம்
(03) தொழினுட்ப வளர்ச்சி
(04) மேற்கூறிய மூன்றும்

12) அனுராதபுரம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் பணப்புழக்கம் இருந்துள்ளதென்பது பின்வருவனவற்றில் எதன் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.
(01) அம்பாறைப் பிரதேசத்தில் நாணயங்கள் கிடைக்கப்பெற்றதன் மூலம்.
(02) நாணயங்களில் மரம், யானை, சூரியன் போன்ற உருவங்கள் காணப்பட்டதன் மூலம்.
(03) 2000 ஆண்டுகளுக்கு முன்பு நாணயங்கள் பாவனையில் இருந்ததன் மூலம்.
(04) நாணயங்கள் தொடர்பான பல மாதிரி உருக்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம்.

13) அனுராதபுர ஆட்சியாளர்களில் ஒருவனான துட்டகைமுனு மன்னனின் மகன்?
(01) காவந்தீசன் (02) தாடோபதீசன் (03) சத்தாதீசன் (04) சாலிய குமாரன்

14) புராதன கல்வெட்டுக்களில் வெவ்ஹமிக, வாபிஹமிக எனக் குறிப்பிடப்பட்டிருப்பது?
(01) பயிர்ச் செய்கை முறை
(02) கிராமக் குளங்கள் அமைத்தவர்கள்
(03) பெருங் குளங்கள்
(04) நீர்ப்பாசனத் துறைக்கு புரிந்த பாரிய பணி

15) நெற்செய்கை தொடர்பாக குறிப்பிடும் தோணிக்கல கல்வெட்டில் இடைப்போகத்தினைக் குறிப்பதற்குப் பயன்படும் சொல்?
(01) அகலஹஸ (02) மெதஹஸ (03) பிடதடஹஸ (04) போகம்

16) வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த கொடவாய துறைமுகம் அமைந்துள்ள இடம்?
(01) மன்னார் (02) திருகோணமலை (03) அம்பாந்தோட்டை (04) பொலன்னறுவை

17) ஹோபிட்டிகம சந்தையில் இருந்த முறைகோடுகளை ஒழிப்பதற்காக 4 ஆம் உதய மன்னனால் எழுதப்பட்ட கல்வெட்டு?
(01) பதுளைத்தூண் கல்வெட்டு
(02) தோணிகல் கல்வெட்டு
(03) அந்தானிதூண் கல்வெட்டு
(04) கல்பொத்த கல்வெட்டு

18) அநுராதபுர கால ஆட்சியாளர்களான வசபன், தாதுசேனன் ஆகிய மன்னர்களின் வம்சங்களுள்ள முறையே தருவது?
(01) இலம்பகர்ண வம்சம், சிங்கள வம்சம்
(02) இலம்பகர்ண வம்சம், நாயக்க வம்சம்
(03) இலம்பகர்ண வம்சம், சோழ வம்சம்
(04) இலம்பகர்ண வம்சம், மௌரிய வம்சம்

19) நீர்ப்பாசனத் துறைக்குப் புரிந்த பாரிய பணிகாரணமாக “மின்னேரியாத் தெய்வம்” எனப் போற்றப்பட்ட அரசன்.
(01) மகாசேனன் (02) தாதுசேனன் (03) முதலாம் சேனன் (04) வசபன்

20) வேளாண்மையைக் குவித்து எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து நெல்லை வேறாக்கும் செயற்பாட்டை அழைக்கப்பயன்பட்ட சொற்பிரயோகம்?
(01) களம் (02) சூடடித்தல் (03) வேளாண்மைக்கதிர் (04) உப்பட்டிக்குவியல்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடைதருக?**

01) கீழே தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் பின்வரும் இடங்களை குறித்து நிற்கும் ஆங்கில எழுத்துக்களை அவற்றுக்கு நேரே எழுதுக.

(01) அனுராதபுரம் (...............)
(02) மாந்தை (...............)
(03) கோகர்ண (...............)
(04) கொடவாய (...............)
(05) யாழ்ப்பாணம் (...............)
(06) பொலன்னறுவை (...............)
(07) கொழும்பு (...............)
(08) காலி (...............)
(09) மட்டக்களப்பு (...............)
(10) ஜம்புகோளப்பட்டினம் (...............)
(11) கண்டி (...............)
(12) கற்பிட்டி (...............)



(12 புள்ளிகள்)

02)

i. ஆதிகாலந்தொட்டு வளர்க்கப்பட்ட விலங்குகள் மூன்றினைக் குறிப்பிடுக?
ii. விலங்கு வளர்ப்பின் மூலம் கிடைத்த நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக?
iii. பின்வரும் சொற்பதங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்களை எழுதுக?

(A) கிரிகெரி : ...........................................................................................
(B) பஸ்கோரச : ...........................................................................................
(C) கோபாலகம் : ...........................................................................................
(D) தவளம் : ...........................................................................................
(E) கோபாலகர் : ...........................................................................................

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

03)

i. சேனையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
ii. "நவதெளிசேனை" ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக?
iii. பின்வருவனவற்றின் மூலம் உணர்த்தப்படும் விடயங்களை அவற்றுக்கு நேரே எழுதுக.

(A) கினியா திகாவ : ...........................................................................................
(B) பிட்டபிம் : ...........................................................................................
(C) பரண் : ...........................................................................................
(D) களம் : ...........................................................................................
(E) வேளாண்மைக்குதிர் : ...........................................................................................

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

04)

i. இலங்கை புராதன காலத்தில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளைப் பேணிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் மூன்றின் பெயர்களை எழுதுக?

ii. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பெறுமதி வாய்ந்த பொருட்கள் நான்கினை குறிப்பிடுக.

iii. 1. இலங்கை முற்காலத்தில் இரத்தினத்துவீபம் என்று அழைக்கப்படக் காரணம் யாது?
2. வர்த்தக அமைப்புக்களை அழைக்க பயன்படும் சொல் யாது?
3. வணிகக் கிராமங்களை அழைக்கப்பயன்படும் சொல் யாது?
4.துறைமுகங்களுக்கு வரும் கப்பல்களில் இருந்து தீர்வை அறவிடுவதை யாருடைய கடமையாகும்?
5. வணிக நகரங்கள் வரலாற்று மூலாதாரங்களில் அழைக்கப்பயன்படும் சொல்.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

05)

i. பண்டுகாபய மன்னன் ஆட்சிக்காலத்தில் பிணங்களை எடுத்துச் செல்வதற்கு நியமிக்கப்பட்டவர்கள் யார்?

ii. புராதன காலத்தில் இலங்கைச் சமூகத்தில் மரணச் சடங்கின் போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் நான்கு தருக?

iii. பின்வருவனவற்றிற்கும் சுருக்கமான விடை தருக.
1. அத்தம் முறை என்றால் என்ன?
2. .விவசாயியாக வேடம் பூண்டு வயல் ஒன்றில் அறுவடை செய்த அனுராதபுரகால அரசன் யார்?
3. சுவையான உணவு சமைத்ததாக சத்தர்மாலங்காரவில் குறிப்பிடப்படும் பெண்ணின் பெயர் யாது?
4. சமையல் கலையில் சிறப்புப் பெற்ற பெண்கள் வரலாற்று மூலாதாரங்களில் அழைக்கப்படும் பெயர்?
5. எங்கள் நாட்டில் வாழ்ந்த பெரும்பாலானோரின் வாழ்வாதார தொழில் யாது?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

06)

i. அநுராதபுர காலத்தின் முற்பகுதியில் எமது நாட்டிலிருந்த சிறந்த ஆட்சியாளர்கள் மூன்று பேரைக் குறிப்பிடுக?

ii. அநுராதபுர காலத்தில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த அரசுரிமை முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு உதாரணம் தருக?

iii. பின்வருவனவற்றிற்கு சுருக்கமான விடை தருக.
(A) மானவர்மன் பரம்பரை ஆட்சி செய்த ஆண்டுகள் எத்தனை?
(B) மானவர்மனின் தந்தை பெயர் யாது?
(C) மானவர்மனின் தந்தையின் மரணத்தின் பின்னர் அனுராதபுரத்தின் ஆட்சிக்கு வந்தவன் யார்?
(D) 2ம் தாடோபதீசனிற்குப் பின்னர் அனுராதபுரத்தில் ஆட்சிக்கு வந்தவன் யார்?
(E) மானவர்மன் ஆட்சி செய்த ஆண்டுகள் எத்தனை?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)